சுருக்கம்

சிறுபான்மையினர் நலன் – 2022–2023–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – சென்னையில் மாநில அளவில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 18–ம் தேதி "சிறுபான்மையினர் உரிமைகள் தின விழா" கொண்டாடுவதற்கு ரூ.2,50,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிந1) த்துறை

அரசாணை (நிலை) எண்.48 நாள் 21.06.2022

திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது, ஆனி 7

படிக்கப்பட்டது :–

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்–செயலர் அவர்களின் கடித எண்.அ1/67/2022, நாள் 06.05.2022

-------

ஆணை:

22.04.2022 அன்று நடைபெற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு சிறுபான்மையினர் நல அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை சட்டமன்றப் பேரவையில் வெளியிட்டார். அதன் விவரம்:–

"மாநில அளவில், ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 18–ம் தேதி "சிறுபான்மையினர் உரிமைகள் தின விழா" 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கொண்டாடப்படும்"

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்–செயலர் அவர்கள் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு சிறுபான்மையினர் நல அமைச்சர் தலைமையில், சிறுபான்மையினர் நல இயக்குநர் முன்னிலையில் மற்றும் மாவட்ட சிறுபான்மையினர் தலைவர்கள் கலந்து கொண்டு சிறுபான்மையினர் உரிமைகள் தின விழாவினை சென்னையில் சிறப்பாக கொண்டாட ஆண்டு ஒன்றுக்கு ரூ.2,50,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்–செயலர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் ஒவ்வொரு ஆண்டும்

மாண்புமிகு சிறுபான்மையினர் நல அமைச்சர் தலைமையில், சிறுபான்மையினர் நல இயக்குநர் முன்னிலையில் மற்றும் மாவட்ட சிறுபான்மையினர் தலைவர்கள் கலந்து கொண்டு மாநில அளவிலான சிறுபான்மையினர் உரிமைகள் தின விழாவினை சென்னையில் சிறப்பாக கொண்டாட தொடரும் செலவினமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.2,50,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

2070 – 00 ஏனைய நிருவாகப் பணிகள் – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – CN – சிறுபான்மையினர் உரிமைகள் தின விழா – 305 அலுவலகச் செலவுகள் – 02 ஏனைய சில்லறைச் செலவுகள்
[IFHRMS த.தொ.கு,: 2070–00–800–CN–30502]

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கும் அதிகாரம் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்–செயலர் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

6. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணை உறுப்பினர்–செயலர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

7. மேற்படி துவக்கப்பட்டுள்ள புதிய கணக்குத் தலைப்பினை தங்களது பதிவேடுகளில் துவக்கி கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு "புதுப் பணி" (New Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வ.செ.பொ–I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாகக் கணக்கிட்டு, 1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை "A"-யினை பூர்த்தி செய்து எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன் பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வ.செ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்–செயலர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்தினை 2022–2023–ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய கருத்துருவை நிதித் (பி,மிபி(ம)சிந/வ.செ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்–செயலர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.28529/நிதி (பி, மிபி(ம)சிந)/2022, நாள் 17.06.2022–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.0401 (நானூற்று ஒன்று)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ.கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
உறுப்பினர்–செயலர்,
தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்,
சென்னை–2.
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை–18
மாநில கணக்காயர், (தணிக்கை–1), சென்னை–18.
மாநில கணக்காயர், (தணிக்கை–2), சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
நகல்
நிதி (பி,மிபி(ம)சிந / (வ.செ.பொ–I, வ.வ–I))த்துறை,
சென்னை–9.
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலன் அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச்
செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர்,
சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை சிறப்புச் செயலாளர்
அவர்களின் நேர்முக எழுத்தர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரி

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

23/06/2022

**பிரிவு அலுவலர்**

23/06/22